# வலைப்பாந்தாட்டம்
# Net ball



ந.தேவதாஸ்
சுகாதாரமும் உடற்கல்வியும்
கே/தெஹி நாகஸ்தன்ன தமிழ் வித்தியாலயம்
தேஹியோவிட்ட கல்வி வலயம்

# வரலாறு

- இது 1891ம் ஆண்டு அமெரிக்காவில் ஜேம்ஸ் நைல் ஸிமித் என்பவரால் உலகிக்குஅறிமுகம்படுத்தப்பட்டது.

- இது இலங்கையில் 1921ம் ஆண்டு திருமதி ஜெனிகிறின் எனும் பெண்மணியால் கண்டி மகளீர் உயர்தரப் பாடசாலையில் அறிமுகம் செய்யப்பட்டது.


- போட்டியின்போது ஏழு வீராங்கனைகளும் பிரதியாட்டக்காரராக ஐந்து வீரங்கனைகளும் உட்பட மொத்தமாக அணியில் பன்னிரண்டு வீரர்கள் உள்ளடக்கப்படுவர்.

# திறன்கள்

- ❖ பாத அசைவு
- ❖ புந்தை எறிதலும் பிடித்தலும்.
- ❖ தாக்குதல்.
- ❖ தடுத்தல்.
- ❖ பேற்றுக்கெய்தல்.
- ❖ உள்ளெறிகை



# மைதானம்


3.05m
30.50 metres
3.05m
10.167m
10.167m
10.167m
3.05m
15.25 metres
Goal Post
R=4.9m
900mm
Goal Post
Obstacle free run-off zone
7.625m
7.625m
3.05m
Obstacle free run-off zone
3.05m

# பேற்றுக்கம்பம்



# பந்து

நிறை :- 400g – 450g

சுற்றளவு :- 69cm – 71cm



# பந்தை மாற்றும் முறைகள்


## தனிக்கையால் பந்தை அனுப்புதல்

- தோளுக்கு நேராக அனுப்புதல்
- தோளுக்கு மேலாக அனுப்புதல்
- சொட்டி அனுப்புதல்
- கீழ்க் கையால் பந்தை அனுப்புதல்


## இருகைகளாலும் பந்தை அனுப்புதல்

- மார்புக்கு நேராக அனுப்புதல்
- தலைக்கு மேலாக அனுப்புதல்
- சொட்டி அனுப்புதல்
- பக்கமாக அனுப்புதல்

# வீராங்கனைகள் நிற்கும் நிலைகள்



# மையத்தோன்   C




WD
GA
GK
C
GS
GD
WA
Direction of play
Area of allowed play for the Centre





C

# பேற்றுக்கு எய்பவர் GS







# பேற்றுக்கு தாக்குபவர் GA






# சிறை தாக்குபவர் WA




WD
GA
GK
C
GS
GD
WA
Direction of play
Area of allowed play for the wing attack





WA

# சிறைக் காவலர் WD


WD
GA
GK
C
GS
GD
WA
Direction of play
Area of allowed play for the Wing defence



WD

# பேற்றிடக் காவலர் GD






# பேறுகாப்பவர் GK


WD
GK
GD
C
GA
GS
WA
Direction of play
Area of allowed play for the
Goal keeper


GK

# நேர அளவுகள்

| வயது | முன் | இடை | பின் |
|---|---|---|---|
| 16கீழ் | 10 | 03 | 10 |
| 18கீழ் | 15 | 05 | 15 |
| 20கீழ் | 20 | 05 | 20 |

# சர்வதேச மட்ட நேர அளவுகள்

- 1ஆம் காற்பகுதி 15நிமிடம் இடைவேளை 04 நிமிடம்
- 2ஆம் காற்பகுதி 15நிமிடம் இடைவேளை 12/8 நிமிடம்
- 3ஆம் காற்பகுதி 15நிமிடம் இடைவேளை 04 நிமிடம்
- 4ஆம் காற்பகுதி 15நிமிடம்



# போட்டி சமனாகும் போது

- போட்டி முடிந்ததும் இடைவேளை 04 நிமிடம்
- 1ஆம் அரைபகுதி 7 நிமிடம் இடைவேளை 1
- 2ஆம் அரைபகுதி 7 நிமிடம்



# வலைப்பந்தாட்டத்தில் ஏற்படும் தவறுகள்

- பந்தை பிடித்தவாறு நடத்தல்
- **3s** மேல் பந்தை வைத்திருத்தல்
- **1/3** பகுதி மேல் பந்தை அனுப்புதல்
- எதிரணி வீரங்கனையை தொடுதல் அல்லது தள்ளுதல்
- தமக்குரிய பிரதேசத்தை விட்டு ஏனைய பிரதேசத்திற்கு செல்லல்
- மத்திய எறிகை வழங்கும் போது பேற்றுவலயத்திற்கு பந்தை அனுப்புதல்

# எறிகைகள்

- சுயாதீன எறிகை
- தண்டனை எறிகையும் எய்தலும்
- உள்ளெறிகை
- இருவருக்கிடையில் மேலெறிதல்



# சுயாதீன எறிகை

பந்துடனுள்ள வீராங்கனையினால் மைதானத்தினுள் இழைக்கப்படும் தவறுகள் காரணமாக எதிரணிக்கு சுயாதீன எறிகை வழங்கப்படுகின்றது.



# தண்டனை எறிகையும்,எய்தலும்

இடையூறு விளைவிப்பதற்கும், உடல் மோதுகைக்கும் தண்டனை எறிகை அல்லது தண்டனை எய்தல் தவறு நிகழ்ந்த இடத்திலிருந்து எதிரணிக்கும் பெற்றுக் கொடுக்கப்படும்.அத்தவறைச் செய்த வீராங்கனை பந்தை எறியும் வீராங்னையின் பின்னால் நிற்றோடு எறிபவரின் கையிலிருந்து பந்து விடுபடும் வரை விளையாட்டில் ஈடுபட முடியாது.

# உள்ளெறிகை

மைதானத்தை விட்டு பந்து வெளியே சென்றால் வெளியே செல்வதற்கு முன்னர் இறுதியாகப் பந்தை ஸ்பரிசித்த வீராங்கனையின் எதிரணிக்கு உள்ளெறிகையொன்று வழங்கப்படும்



# இருவருக்கிடையில் மேலெறிதல்

இரு அணிகளையும் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் ஒன்றாகப் பந்தைப் பற்றியிருத்தல். இருவர் ஒன்றாக தவறிழைத்தல் மற்றும் அவசர நிலைமைகளில் போட்டி இடைநிறுத்தப்பட்டு மீண்டும் அரம்பிக்கப்படும் போது பந்து எவ்வணியினருக்குரியது எனத் தீர்மானிக்க முடியாத சந்தர்ப்பங்களிலும், இரு அணிகளினதும் இரு வீராங்கனைகளுக்கிடையே பந்து மேலெறியப்படும்.

# பாதங்கள் தொடர்பாக ஏற்படக்கூடிய தவறுகள்

- பந்தைக் கைப்பற்றிய வீராங்கனை நிலம்பட்ட பாதத்தை நிலத்தினூடாக இழுத்தல் அல்லது வழுக்கிச் செல்லுதல்
- ஏதாவது ஒரு பாதத்தால் துள்ளுதல்.
- ஒரு சில கவடுகள் வைத்தல்.
- பந்தைக் கையிலிருந்து விடுவிக்காது இரு பாதங்களாலும் மேலெழுந்து பாதங்களாலும் நிலம்படுதல்

# பந்தைக் கையாளும் போது நிகழும் தவறுகள்

- மத்திய பிரதேசத்தை ஸ்பரிசிக்காது மத்திய எறிகையைப் பெறுதலும் , ஊதி ஒலிக்கும் முன்னர் மத்திய பிரதேசத்திற்குள் பிரவேசித்தலும்
- வீராங்கனைகள் தமக்கு உரித்தல்லாத பகுதிக்குள் பிரவேசித்தல்
- மைதானத்தின் மூன்றிலொரு பகுதிக்கு மேலால் பந்தை அனுப்புதல்.
- பந்தைப் பற்றும் போது பேற்றுக் கம்பங்களை ஆதாரமாகக் கொள்ளுதல்.

# பந்தைக் கையாளும் போது நிகழும் தவறுகள்

- பந்தை உருட்டி அனுப்புதல்.
- பந்தை மேலே எறிந்து மீண்டும் பிடித்தல்
- மைதானத்தில் கிடந்தவாறு அல்லது முழங்காலிலிருந்து பந்தை அனுப்புதல்
- மூன்று வினாடிகளுக்கு மேல்
- பந்து மாற்றுதலின் போது இருவருக்கிடையே உள்ள இடைவெளி குறைவாக இருத்தல்.

# மத்திய எறிகையின் போது ஏற்படக்கூடிய தவறுகள்

- ❖ மத்திய எறிகையைப் பெற்ற அணியின் வீராங்கனையொருவர் பிரதேசத்தை ஸ்பரிசிக்காத பந்தைப் பேற்றுப் பிரதேசத்தில் பெற்றுக் கொண்டால் பந்து கோட்டைக் கடந்த இடத்திற்கு மிக நெருக்கமாக பேற்றுப் பிரதேசத்தில் எதிரணிக்கு சுயாதீன எறிகையொன்று வழங்கப்படும்.
- ❖ இரு பாதங்களாலும் நிலம் தொட்ட வீராங்கனையொருவரின் ஒரு பாதம் முழுமையாக பேற்றுப் பிரதேசத்திலும் மறுபாதம் முழமையாக மத்திய பிரதேசத்திலும் லைக்கப்படுமாயின் பந்தை அவர் பேற்றுப் பிரதேசத்தில் பெற்றுக் கொண்டதாக கொள்ளப்படும்

# மத்திய எறிகையின் போது ஏற்படக்கூடிய தவறுகள்

- எதிரணி வீராங்கனையொருவர் மத்திய பிரதேசத்தில் அல்லது பேற்றுப் பிரதேசத்தில் பந்தைப் பெற்றால் அல்லது ஸ்பரிசித்த பாதங்கள் இரண்டும் குறுக்குக் கோட்டின் இருபுறமும் வைக்கப்பட்டவாறு பெறப்படின் அனுகூலம் தொடர்பான விதி பின்பற்றப்படும்.
- மத்திய எறிகையின் போது பந்து எவரையும் ஸ்பரிசிக்காது மத்திய பிரதேசத்தின் பக்கக் கோடுகளைக் கடந்து வெளியேறுமாயின் பந்து வெளியேறிய இடத்திலிருந்து எதிரணிக்கு உள்ளெறிகையொன்று வழங்கப்படும்.

# தண்டனை எறிகை அல்லது தண்டனை எய்கையைத் தண்டனையாக வழங்கும் சந்தர்ப்பங்கள்

## தண்டனை எறிகை

- பந்துடனுள்ள வீராங்கனையிலிருந்து 0.9 மீற்றர் (3 அடி)க்குக் குறைவான தூரத்தில் கலடுகள் வைத்து மறித்தல்
- காக்கும் போது,ஆக்கிரமிக்கும் போது எதிரணி வீராங்கனையை இடித்தல்
- தள்ளுதல்,கால் தடமிட்டு வீழ்த்துதல், அடித்தல்
- எதிரணி விளையாட்டு வீராங்கனையின் மீது விழுதல், உடலின் மீது திடீரென பாய்தல், முழங்கையால் குறுக்கிடுதல், பந்தினால் தள்ளுதல்.
- அவசரத்தில் அல்லது வேண்டும் என்று எதிரணி வீராங்கனையைப் பற்றிக் கொண்டிருத்தல்

# தண்டனை எறிகை அல்லது தண்டனை எய்கையைத் தண்டனையாக வழங்கும் சந்தர்ப்பங்கள்

தண்டனை எய்கை

- பேற்று வட்டத்தினுள் மேலேயுள்ள தவறுகள் இடம்பெறுதல்.
- 0.9 மீற்றர் (3 அடி)க்கும் குறைவான தூரத்தில் வீராங்கனையின் எதிரில் நின்று எய்தலுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துமுகமாகக் கைகளை விரித்தல்.
- பக்கத்தில் நின்று பந்தை அடித்தல், பந்தின் மேல் ஒரு கையை அல்லது இரு கைகளையும் வைத்தல்
- எய்தலுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துமுகமாக காக்கும் வீராங்கனைகள் பேற்றுக் கம்பத்தை அசைத்தல்

# இருவருக்கிடையில் பந்தை மேலெறிதல் தண்டணையாக வழங்கும் சந்தர்ப்பங்கள்

- இரு அணிகளையும் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் ஒன்றாகப் பந்தைப் பற்றியிருத்தல்..
- இரு அணிகளையும் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் ஒன்றாகப் மைதானத்திற்கு வெளியே அனுப்புதல்
- இரு அணிகளையும் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் தமக்கு விலக்கப்பட்ட பிரதேசத்திற்குள் ஒன்றாகப் பிரவேசிப்பதும் ஒருவர் அல்லது இருவரும் பந்தை பெறுதல் அல்லது ஸ்பரிசித்தல்.
- இரு அணிகளையும் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் விளையாட்டுக்கு இடைஞ்சல் ஏற்படும் வண்ணம் மோதிக் கொள்ளல்

# இருவருக்கிடையில் பந்தை மேலெறிதல் தண்டனையாக வழங்கும் சந்தர்ப்பங்கள்

- பந்து மைதானத்தை விட்டு வெளியேறுமுன் இதனை எவர் மைதானத்தை விட்டு வெளியேற்றினார் என்பதை நடுவர்களால் தீர்மானிக்க முடியாத சந்தர்ப்பத்தில்

- தவறு இடம்பெற்ற இடத்திற்கு மிக அருகாமையிலும் தவறு ஏற்பட்ட வீராங்கனைகக்கிடையிலுமே மேலெறிதல் நடைபெற வேண்டும்.

# போட்டி நடுவர்கள்

- போட்டியை நிர்வகிக்கவும் தீர்வுகளை வழங்கவும் 02
- நேரக்கணிப்பாளர் 02
- புள்ளிப்பதிவாளர் 02

# நடுவரின் சமிஞ்ஞைகள்




பாத அசைவு

குறுகிய பரிமாற்றம்



# நடுவரின் சமிஞ்ஞைகள்










உடல் மோதுகை

# நடுவரின் சமிஞ்ஞைகள்




பந்தை பற்றியிருத்தல்

அனுப்பவேண்டிய திசை



# நடுவரின் சமிஞ்ஞைகள்




மேலெறிகை

இடையூறு விளைவித்தல்



# நடுவரின் சமிஞ்ஞைகள்




உறித்தற் பிரதேசம்

மூன்றில் ஒரு பகுதிக்கு மேலாக அனுப்புதல்

மத்திய பிரதேசத்திற்குள் நுழைதல்

# நடுவரின் சமிஞ்ஞைகள்




அனுகூலம்